**வரையறுக்கப்பட்ட ரக்னா ஆரக்ஷக லங்கா கம்பனி -2017**

---

**1 நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

வரையறுக்கப்பட்ட ரக்னா ஆரக்ஷக லங்கா கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பில் தாக்கமொன்று ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது தீர்மானங்கள் கணக்காய்வாளரின் அறிக்கை திகதி வரை பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையிலாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை அறிக்கையிடல் நியமங்கள் இலக்கம் 07 (SLFRS 07) இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் பிணைக்காக வைக்கப்பட்டுள்ள நிதி உபகரணங்களின் பெறுமதி மற்றும் அப்பிணைக்காக காணப்படும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட வேண்டிய போதும் கம்பனியால் கேள்வி பொறுப்பு மற்றும் செயலாற்றல் பொறுப்பு என்பவற்றிற்காக பிணையாக வைத்துள்ள ரூபா 40,394,318 ஆன நிலையான வைப்புக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2018/19 நிதியாண்டின் போது திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களின் கம்பனியின் பிரதான கட்டிடத்தின் ஆரம்ப அத்திவார நிர்மாண வேலைகளிற்காக ரூபா 739,461,677 (வரியுடன்) கிரயம் ஏற்பட்டிருந்தது. இக்கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி நிறுத்தப்பட்டிருந்தது. கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியின் உரித்தினை மீளாய்வாண்டின் இறுதி வரை கம்பனிக்கு கையேற்கப்படா திருந்ததுடன் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் அக்கட்டிடம் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020/2021 நிதியாண்டின் போது மீண்டும் ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக | விரைவில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| கடன்பட்டோர் மீதி | 26,908,333 | 1,504,142 | 25,404,191 | பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் நடைமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி அதற்கு அண்மித்த அறிக்கையின் பிரகாரம் சமமாக இருக்க வேண்டுமென |

### 1.5.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் சீடைகளையும் தோட்டா இருப்பும் | 34,250,522 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை | புதிய முகாமைத்துவத்தின் கீழ் 2020/21 ஆம் ஆண்டின் போது அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.6 பெறவேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 1,746,485,473 ஆன வியாபார பெறவேண்டிய மீதிகளில் வ/ப அவன் கார்ட் மெரிடைம் (தனியார்) கம்பனியிடமிருந்து 2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை பெறவேண்டிய ரூபா 1,428,866,986 ஆன கடன்பட்டோர் மீதிக்குரிய மீதி உறுதிப்படுத்தல்கள் 03 ஆண்டுகளாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அம்மீதிகளின் சரியானதன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | 2021 ஆம் ஆண்டினுள் மீதி உறுதிப்படுத்தல்களைப் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க இயலுமாக உள்ளதாக | மீதி உறுதிப்படுத்தல்களை கோருவதற்கு (பெற்றுக் கொள்ளல்) இடம்பெற வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான ரூபா 2,182,942,702 வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்ட வ/ப அவன்ட் கார்ட் மெரிரைம் சேர்விசஸ் (தனியார்) கம்பனியிடமிருந்து பெற வேண்டிய மொத்த கடன்டோர் மீதி ரூபா 1,890,499,614 ஆக | தற்போது நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு விடயம் ஒன்றாக இருப்பதால் அதனை இணக்கத்திற்கு உட்படுத்தி 2021 ஆம் ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | இருந்ததுடன் தேறிய சொத்துக்களில் 57 சதவீதத்தை பிரதிநிதித்துவப் படுத்தியிருந்தது. | | வேண்டுமென |
| (இ) | கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான ரூபா 523,781,502 வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் காலி மிதக்கும் ஆயுத செயற்திட்டம் மற்றும் ரங்கல ஆயுதங்களை விமானத்தில் போக்குவரத்துச் செய்யும் செயற்திட்டத்திற்காக வ/ப அவன்ட் கார்ட் மெரிரைம் சேர்விசஸ் (தனியார்) கம்பனி இடமிருந்து 2012 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை பெறவேண்டிய ரூபா 461,632,628 ஆன மீதிக்குரிய மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு 03 ஆண்டுகளாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அம்மீதிகளின் சரியானதன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | - மேற்படி - | மீதிகளின் சரியானதன்மையை (பெற்றுக்கொள்வதற்கு) கோருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென |
| (ஈ) | கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனிக்கு அறவிட வேண்டிய தரைப்பிரிவு பாதுகாப்பு பிரிவினதும் சமுத்திர பாதுகாப்பு பிரிவினதும் வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் முறையே ரூபா 214,893,768 தொகை மற்றும் ரூபா 1,531,591,705 ஆக இருந்ததுடன் அம்மீதிகளில் முறையே ரூபா 200,314,299 மற்றும் ரூபா 101,973,313 தொகையான கடன்பட்டோர் மீதிகளுக்காக மீதி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்ட போதும் தரைப்பிரிவு பாதுகாப்பு பிரிவின் ரூபா 26,946,884 மற்றும் சமுத்திர பாதுகாப்பு பிரிவின் ரூபா 361,544 ஆன மீதிகளுக்காக மாத்திரம் மீதி உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப் பெற்றன. அதன் பிரகாரம் கடன்பட்டோர் மீதிகளில் முறையே ரூபா 173,367,415 மற்றும் ரூபா 101,611,769 தொகையான மீதிகளுக்காக மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அம்மீதிகளின் சரியானதன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | மீதிக உறுதிப்படுத்தல்கள் கோரப்பட வேண்டும் |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு 815,299,681 ஆன வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில் வ/ப அவன் கார்ட் மெரிடைம் | பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(தனியார்) கம்பனிக்கு 2015 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 762,814,313 ஆன மீதிகளுக்குரிய மீதி உறுதிப்படுத்தல்கள் 03 ஆண்டுகளாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அம்மீதிகளின் சரியானதன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 22,259,368 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 48,614,305 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 26,354,937 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு நிர்வாக செலவினங்களில் உள்ளடக்கப்பட்ட மதியுரைக் கட்டணங்கள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 543 ஆல் அதிகரித்தமை பிரதானமான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் படிகள் செலவினம் முறையாக ரூபா 59,800 மற்றும் ரூபா 392,500 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் அச்செலவினம் 556 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் தேறிய இலாப விகிதம் 4.88 சதவீதத்தினாலும் கடன்பட்டோர் புரள்வு விகித தடவை 0.17 இனால் குறைவடைந்திருந்ததுடன் கடன் அறவீட்டுக் காலம் 318 நாட்களால் அதிகரித்திருந்தது. அது தொடர்பாக கவனம் செலுத்தி கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும்.